தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 095/ந/2021
நாள்.27.12.2021

டாக்டர். தா.சுந்தரவடிவேலன்,
நாகப்பட்டினம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், 33 சாலமன் தோட்டம், காடம்பாடி என்ற விலாசத்தில் வசிக்கும் டாக்டர்.தா.சுந்தரவடிவேலன் என்பவரது 16.10.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.10.2021 அன்று பெறப்பட்டு, 095/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

நாகப்பட்டினம் மாவட்டம், 33 சாலமன் தோட்டம், காடம்பாடி என்ற விலாசத்தில் வசிக்கும் டாக்டர்.தா.சுந்தரவடிவேலன் என்பவர் தமது மனுவில் நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளது. அந்த வணிக வளாகத்தில் கடை எண்.42 மற்றும் 44-ன் வாடகைதாரர்களாக திரு.ரங்கசாமி அவர்களும் திரு.செந்தில்சிவக்குமார் அவர்களும் இருந்து வருகிறார்கள். திரு.ரங்கசாமி மற்றும் திரு.செந்தில்சிவக்குமார் இருவரும் மதுபான கூடத்திற்கு நாள் ஒன்றுக்கு 1 கடைக்கு ரூபாய்.1000/- வீதம் மாதம் ரூ.30,000/- என்று திரு.கே.முத்துப்பாண்டி என்பவர் மீது மதுபானக்கூடம் நடத்த உள்வாடகைக்கு விட்டுள்ளனர். (டாஸ்மாக் பட்டியலின் படி டாஸ்மாக் மதுபான கடை 5605-க்காக மதுபான கூடம் நடத்துவதற்கு திரு.கே.முத்துப்பாண்டி என்பவருக்கு நகராட்சி கடை எண்.42 மற்றும் 44-க்கு அனுமதி அளித்துள்ளது).

2. கொரோனா ஊரடங்கு காலத்தில் தமிழ்நாடு அரசு மது கூடங்களை திறக்க தடை விதித்திருந்த சமயத்தில், சட்ட விரோதமாக அரசு உத்தரவை மீறி, அரசு உத்தரவை அலட்சியப்படுத்தும் விதத்தில் சட்டவிரோதமாக மதுபான கூடத்தை திறந்து வைத்து அதிக விலைக்கு, தமிழ்நாடு அரசுக்கு பொருளாதார இழப்பு, ஏற்படும் விதத்தில் புதுவை மாநில மதுவகைகளை விற்றதால் டாஸ்மாக் மேலாளர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு தமிழ்நாடு மதுவிலக்கு அமல்பிரிவு போலீசாரால் வழக்குபதிவு செய்யப்பட்டு திரு.பாலா என்பவர் கைது செய்யப்பட்டார்.

3. ஆனால், நகராட்சி ஆணையர் அவர்கள், திரு.செந்தில்சிவக்குமார் மற்றும் திரு.ரங்கசாமி ஆகியோர் உள்வாடகைக்கு திரு.கே.முத்துப்பாண்டி என்பவருக்கு உள்வாடகைக்கு விட்டதை மறைத்து மேற்படி நபர்களின் வாடகை உரிமத்தை ரத்து செய்யாமல் தொடர்ந்து திரு.ரங்கசாமி அவர்களும், திரு.செந்தில்சிவக்குமார் அவர்களும் மதுபானக்கூடம் நடத்துவதற்கு அனுமதி அளித்துள்ளார்.

4. எனவே, வாடகைதாரர் சட்டவிரோதமாக நகராட்சி கடையை உள்வாடகை விட்டதால், உள்வாடகைக்கு பெற்றவர் சட்டவிரோத மது விற்று, கடை சீலிடப்பட்டப்பிறகும், தொடர்ந்து 1 மாத வாடகை ரூ.30,000/-க்கு ஒரு கடையை உள்வாடகைக்கு விட்ட நபர்களுக்கே கடையை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்கியுள்ள நகராட்சி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் திருமதி.ஸ்ரீதேவி அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் உள்வாடகைக்கு விட்ட வாடகைதாரர்கள் திரு.ரங்கசாமி, திரு.செந்தில்சிவக்குமார் ஆகியோரின் நகராட்சி கடை உரிமத்தை நகராட்சி ரத்து செய்ய உத்தரவிடும்படியும் வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

5. இம்மனு தொடர்பான விளக்க அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 22.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

ஆணையாளர் தமது 01.12.2021 நாளிட்ட அறிக்கையை அனுப்பியுள்ளார். அவ்வறிக்கையில் திரு.தா.சுந்தரவடிவேலன் என்பவர் புகார் மனு தொடர்பாக வருவாய் ஆய்வர் (பொறுப்பு) அவர்களால் 12.08.2021 அன்று நேராய்வு செய்யப்பட்டது. நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் கடை எண்.43 டாஸ்மாக் நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடையின் வலது மற்றும் இடது புறம் உள்ள கடை எண்.42 மற்றும் 44ல் வெளிமாநில மதுபானங்கள் வைத்து வியாபாரம் செய்ததாகவும் அரசு அனுமதி பெறாமல் மதுபானக் கூடம் நடத்தியதாகவும், கடையினை உள்வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் வரபெற்ற புகார் மனு மீது 16.08.2021 நாளிட்ட கடிதம் மூலம் கடை எண்.42 மற்றும் 44 குத்தகைதாரர்களுக்கு தனித்தனியே விளக்கம் கோரப்பட்டது.

25.08.2021 நாளிட்ட விண்ணப்பங்களில் குத்தகைதாரர்களால் கடை எண்.43ல் டாஸ்மாக் கடை எண்.5605 இயங்கி வருகிறது எனவும், கடை எண்.42 மற்றும் 44 எங்களது நண்பர் திரு.கே.முத்துப்பாண்டி என்பவர் பெயரில் மதுபானக்கூடம் நடத்த உரிமம் பெற்று அதில் பங்குதாரர்களாக இருந்து வியாபாரம் செய்து வந்ததாகவும் கொரோனா கால சூழ்நிலையாய் மதுபானக் கூடம் நடத்த அரசு அனுமதி இல்லாமல் இருந்தபோது, மேற்படி கடையில் வேலை செய்துவந்த திரு.பாலமுருகன் என்பவர் வருவாய் நோக்கத்தில் வெளிமாநில மதுபானங்களை வைத்து தங்களுக்குத் தெரியாமல் வியாபாரம் செய்து வந்ததாகவும் டாஸ்மாக் நிறுவனம் மூலம் 06.08.2021 அன்று கண்டறியப்பட்டு மதுவிலக்கு காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக வேறேதேனும் தவறுகள் நடக்காத வண்ணம் கடை எண்.44 தற்காலிகமாய் பூட்டி வைக்கப்பட்டது, என்றும் பின்னர் டாஸ்மாக் கடைக்கும் பார்

நடத்தும் நபருக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என முடிவெடுத்து இரு தினங்களில் வட்டாட்சியர் மூலம் கடை திறக்கப்பட்டது எனவும், அரசு அனுமதி பெறாமல் நாங்கள் சட்ட விரோதமாக எந்த செயலிலும் ஈடுபடவில்லை எனவும் தங்களின் தனிப்பட்ட காழ்புணர்ச்சி காரணமாக புகார் மனு அளிக்கப்பட்டதாகவும் திரு.ரங்கசாமி மற்றும் திரு.செந்தில்சிவக்குமார் இருவரும் தெரிவித்தாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி குத்தகைதாரர்களால் தெரிவிக்கப்பட்ட விளக்கத்தினை ஏற்றும், நோய்வின் போது மதுபானம் கூடம் எதுவும் நடைபெறவில்லை எனவும், கடையினை உள்வாடகைக்கு எதுவும் விடப்படவில்லை எனவும், நகராட்சி ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுவதாக கண்டறியப்பட்டதால் தொடர்ந்து மேற்படி குத்தகைதாரர்களே கடையின் உரிமைத்தை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையத்தில் அரசு வழிகாட்டுதல் படியும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.22183/2007/க1 நாள்.30.11.2007ன் படியே டாஸ்மாக் கடை நடத்த உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதன் விபரம் 01.09.2021 நாளிட்ட கடிதம் மூலம் திரு.தா.சுந்தரவடிவேலன் என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களை, 16.12.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.12.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

6. 16.12.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

நாகப்பட்டினம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் நகரட்சிக்கு சொந்தமான கடை எண்.43ல் TASMAC கடை (Tasmac Shop No. 5605) இயங்கி வருகிறது. மேற்கண்ட கடையோடு இணைந்த மதுபானக் கூடத்தை (Bar) திரு.முத்துபாண்டி என்பவர் ஏலம் எடுத்துள்ளார். 43 எண்ணிலுள்ள TASMAC கடையுடன் ஒட்டியுள்ள 42 மற்றும் 44 எண்ணுடைய கடைகள் முறையே திரு.ரங்கசாமி மற்றும் திரு.செந்தில்சிவக்குமார் ஆகிய இருவரும் கடைகளை எடுத்து முத்துபாண்டி என்பவருக்கு உள்வாடகைக்கு விட்டு தலா ஒரு கடைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் மாதத்திற்கு ஒரு கடைக்கு ரூ.30 ஆயிரம் வாடகையாக வசூலித்து வருகிறார். ஆனால், அவர் நகராட்சிக்கு சொற்ப தொகையையே வாடகையாக செலுத்தி நகராட்சியை ஏமாற்றி வருகிறார்.

மேலும் மேற்கண்ட நகராட்சி கடை எண்.43-ற்கு இருபுறமுள்ள நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.42 மற்றும் 44 ஆகிய கடைகளை ஏலத்தில் எடுத்துள்ள நபர்கள், இரண்டு கடைகளையும் வேறு நபருக்கு சட்டவிரோதமாக உள்வாடகைக்கு விட்டு இரண்டு கடைகளையும் மதுபானக் கூடமாக மாற்றி கள்ளத்தனமாக வெளி மாநில மது விற்பனையும் செய்து வருகின்றனர். இதனை காவல்துறையும் கண்டுபிடித்து நடவடிக்கையும் எடுத்துள்ளனர். ஆனால் நகராட்சி விதித்துள்ள நிபந்தனைகளை மீறி கடைகளை உள்வாடகைக்கு எடுத்தவர்கள் மதுபானக் கூடமாக மாற்றி மது விற்றுவந்ததை நாகப்பட்டினம் நகராட்சியைச் சேர்ந்த அலுவலர்கள் கண்டுக்கொள்ளவில்லை.

எனவே, நகராட்சிக்கு சொந்தமான கடையை ஏலம் எடுத்து உள்வாடகைக்கு விட்டுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள்

மீதும், மேலும் நகராட்சி விதித்த நிபந்தனைகளை மீறி செயல்பட்ட நகராட்சி கடை எண்.42 மற்றும் 44 ஆகியவற்றை ஏலம் எடுத்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து, உரிமத்தை ரத்து செய்யுமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

7. 16.12.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் சார்பாக வருவாய் அலுவலர் ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்பித்தார்.

"நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.43ஐ டாஸ்மாக் மேலாளர் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடை உள்வாடகைக்கு ஏதும் விடப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட கடைக்கு பக்கத்தில் உள்ள கடை எண். 42 மற்றும் 44 ஆகிய கடைகள் முறையே திரு.ரங்கசாமி மற்றும் திரு.செந்தில்சிவக்குமார் ஆகியோர் ஏலத்தில் எடுத்திருந்தனர். மேற்கண்ட இரண்டு கடைகளின் முன் கொரானா காலத்தில் ஷெட் போட்டு கள்ளத்தனமாக மது விற்பனை செய்தும், மதுபான கூடமாக இயங்கி வந்ததையும் கண்டுபிடித்த காவல்துறை அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்கண்ட கடை எண்.42 மற்றும் 44ல் அனுமதி பெறாமல் மதுபானக் கூடம் நடத்தியதற்காகவும், கடையினை உள்வாடகைக்கு விட்டதற்காகவும் குத்தகைதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கோரப்பட்டது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது தொடர்பான புகைப்படத்தையும் இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் மனு குறித்து நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை ஆணையாளர் சார்பாக நாகப்பட்டினம் நகராட்சி வருவாய் அலுவலர் அளித்த வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.43ல் இயங்கி வரும் அரசு மதுபான கடைக்கு (டாஸ்மாக்) இருபுறமும் உள்ள கடை எண்.42 மற்றும் 44 ஆகிய கடைகள் திரு.ரங்கசாமி மற்றும் திரு.செந்தில்சிவக்குமார் இருவரும் ஏலம் எடுத்து அதை திரு.கே.முத்துப்பாண்டி என்பவருக்கு பார் நடத்துவதற்காக உள்வாடகைக்கு விட்டுள்ளதும் அந்த கடையில் வேலை செய்து வந்த திரு.பாலமுருகன் என்பவர் வருவாய் நோக்கத்தில் வெளிமாநில மது பானங்களை வைத்து தங்களுக்கு தெரியாமல் வியபாரம் செய்து வந்ததாக கடையை ஏலம் எடுத்தவர்களான திரு.ஆர்.ரங்கசாமி மற்றும் திரு.எம்.செந்தில்சிவக்குமார் இருவரும் தெரிவித்ததாக ஆணையாளரே தமது அறிக்கையில் தெரிவித்திருப்பது வினோதமாக இருக்கிறது. அந்த பகுதியில் என்ன நடக்கிறது என்று நகராட்சி நிர்வாகம் கவனிக்க தவறியுள்ளது. இச்செயல் டாஸ்மாக் நிறுவனம் மூலம் 06.08.2021-ல் கண்டறியப்பட்டு மதுவிலக்கு காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் வரையில் நகராட்சி நிர்வாகம் இதனை கவனிக்கவில்லை இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் சார்பாக விசாரணையில் கலந்து கொண்ட வருவாய் அலுவலர் மேற்கண்ட இரண்டு கடைகளின் முன் கொரானா காலத்தில் ஷெட் போட்டு கள்ளத்தனமாக மது விற்பனை செய்ததையும், அக்கடைகள் மதுபான கூடமாக இயங்கி வந்ததையும், காவல்துறையினர் அதனை கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துள்ளதையும் ஒப்புக்கொண்டு அதற்கு ஆதாரமாக ஷெட் போட்டு கள்ளத்தனமாக மது விற்பனை செய்ததற்கான புகைப்பட நகல்களையும் இம்முறைமன்றத்தில் சமர்பித்துள்ளார். இந்நிகழ்விலிருந்து நகராட்சி விதித்துள்ள விதி முறைகள் / நிபந்தனைகளை மீறி கடைகளை

ஏலம் எடுத்தவர்கள் அதனை உள்வாடகைக்கு விட்டதும் அதில் கள்ளதனமாக மதுவிற்பனை நடைபெற்றுள்ளதும் தெளிவாகிறது.

எனவே, நகராட்சிக்கு சொந்தமான கடைகளை ஏலம் எடுத்து உள்வாடகைக்கு விட்டதையும் அதனால் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்கும், அதில் கள்ளத்தனமாக மதுவிற்பனை நடைபெற்றதையும் தடுக்க தவறிய ஆணையாளர், வருவாய் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான சட்டவிதிகளுக்குட்பட்டு துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், கடை எண்.42 மற்றும் 44 ஆகியவற்றினை ஏலம் எடுத்தவர்களின் ஏல உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறும் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) டாக்டர்.தா.சுந்தரவடிவேலன்,
33, சாலமன் தோட்டம்,
காடம்பாடி, நாகப்பட்டினம் - 611 001.

2) ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம் - 611 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.